# திருவள்ளுவரின் பிறழ்வுநிலை உணர்வுகள்

4

முனைவர் ஜெ. சந்திரிகா
தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
அண்ணாநகர், சென்னை-40.
மின்னஞ்சல்: cj.dot.skcw@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

பொதுவாகத் தன்னைப் பற்றியோ தான் சார்ந்த சமூகம் பற்றியோ சிந்தித்து அங்குள்ள சீர்கேடுகளை அவலங்களைக் கண்டு வெளிப்படுத்தும் **கோபம் வருத்தம் அச்சம் நகை எள்ளல் இளிவரல்** முதலியவற்றைப் பிறழ்வுநிலை உணர்வுகள் என்பர். உலகமக்களின் நல்லொழுக்க வாழ்க்கையைப் பற்றி எப்போதும் சிந்திக்கும் திருவள்ளுவர், தான் எழுதிய திருக்குறளில் தனது பிறழ்வுநிலை உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார். அவரது தார்மீக கோபம், மனிதனின் கீழ்நிலையைக் கண்டு வருத்தம், சமூகத்தை ஏமாற்றும் போலிகளின் மீது எள்ளல், துன்பத்திலும் சிரிக்கும் நகை, நயவஞ்சககர்களிடம் அச்சம், மதம் மற்றும் பாலியல் சிந்தனை ஆகியவற்றை உள்ளடக்கியதாக ஆய்வுக்கட்டுரை அமைந்துள்ளது.

**ஆய்வுநோக்கம்**

திருவள்ளுவரைப் புறத்திலிருந்து பார்க்கும் ஆய்வுகளைத் தாண்டி அவரது அகஉணர்வுகளை ஆராயும் நோக்கில் இந்த ஆய்வு அமைந்துள்ளது. மேலும் திருவள்ளுவரின் பிறழ்வுநிலை உணர்வுகளை மதிப்பிடுவதன் மூலம் அவரது உலகளாவிய சிந்தனையையும் திருக்குறள் உலகநூல் என்பதையும் அறுதியிட முனைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்**

போகூழ், ஆகூழ், அறச்சினம், வெம்புதல், பயத்தல்

**முன்னுரை**

உலகப்பொதுமறையாம் திருக்குறளின் வழி திருவள்ளுவர் சுட்டும் பல்வேறு உணர்வுகளை நன்குணரமுடியும். அவற்றுள் பிறழ்வுநிலை உணர்வுகள் குறித்து இக்கட்டுரை அமைகின்றது. பிறழ்வுநிலை உளவியல் என்பது இயலாமையையும் துயரத்தையும் விளைவிக்கின்ற மனம் சார்ந்த வெளிப்பாடு அல்லது நடத்தை ஆகும். பொதுவாகத் தன்னைப் பற்றியோ தான் சார்ந்த சமூகம் பற்றியோ சிந்தித்து அங்குள்ள சீர்கேடுகளை அவலங்களைக் கண்டு வெளிப்படுத்தும் **கோபம்**

**வருத்தம் அச்சம் நகை எள்ளல் இளிவரல்** முதலியவற்றைப் பிறழ்வுநிலை உணர்வுகள் என்பர். உலகமக்கள் நல்லொழுக்க வாழ்க்கையை வாழவேண்டும் எனும் பேரவா கொண்டிருந்த வள்ளுவருக்கு அதற்குத் தடையாக இருந்த அனைத்தையும் களையவேண்டும் எனும் ஆவேசம் எழுந்தது. அதன் விளைவே திருக்குறள் எனும் உலகச்சாதனை நூல். இந்நூலின் வழி வள்ளுவரின் பிறழ்வுநிலை உணர்வுகளை இங்கு காண்போம்.

**அறச்சினம்**

சமூகச் சீர்கேட்டைக் களைய மனிதனுக்குக் கோபம் வேண்டும் என்பதையே பாரதியார், ‘ரௌத்திரம் பழகு’[1] என்றார். கோபத்தின் உச்சம் வெகுளி. இந்த வெகுளி தன்னையும் அழித்து தன்னைச் சார்ந்தவர்களையும் அழிக்கும் தன்மை உடையது என்பதை அறிந்தே வள்ளுவர், வெகுளாமை எனும் அதிகாரத்தைப் படைத்தார். ஆனாலும் அவரது அறச்சினம், தார்மீகக் கோபம் பல இடங்களில் குறளில் வெளிப்படுகின்றது. தனிமனித ஒழுக்கமே சமூகநடத்தையாக வெளிப்படுகிறது. அதனால் தனிமனித ஒழுக்கத்திற்குத் தேவையானவற்றை ஒவ்வொரு அதிகாரங்களாகப் பகுத்தமைத்தார். மனதில் குற்றமில்லாதவனாக இருத்தலே அறம் (கு.34) என எளிமையாகக் கூறிய வள்ளுவர், இல்வாழ்க்கையின் பண்பாக அன்பும் பயனாக அறமும் உள்ளதால் (கு.45) அதனைக் கைக்கொண்டு வாழ்வதே ஒழுக்கவாழ்வென்பதை வலியுறுத்துகிறார். அன்பு அறத்திற்கு மட்டுமன்றி வீரத்திற்கும் துணைநிற்பது (கு.76). அதனால் நாம் துன்பப்பட நேரிட்டாலும் பலபேருக்கு நன்மையுண்டாகக் கூடிய காரியத்தை வைராக்கியத்தோடு செய்வதற்கு வீரமும் விவேகமும் வேண்டுமென்கிறார் (கு.669) ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதுவது மட்டுமல்லாது அதனைக் கைக்கொள்ள எவரிடத்தும் பொறாமை கொள்ளாதிருக்கவேண்டும். (கு.162) ஒழுக்கத்தைச் சீர்குலைக்கும் தீயச் செயல்களாகிய புறங்கூறல், பொய், களவு, சூது, பேராசை, பொதுமகளிர் சேர்க்கை, சோம்பல், உழைப்பின்மை, வறுமை முதலியவற்றை எண்ணி “நெஞ்சுபொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்”[2] எனப் பாரதியைப் போல் கொந்தளித்தார் வள்ளுவர். “கொடிது கொடிது வறுமை கொடிது” ஆம்! வள்ளுவருக்கு வறுமைக்கு உவமையாக வறுமையையே சொல்லத் தோன்றுகிறது(கு.1041). பொருளீட்டுதல் உலகக்கடமை. அதனைச் செய்யாது விதியெனக் கூறுவோரைச் சாடுகிறார். ஈதலை அறமாக வலியுறுத்திய அவரே, இரப்பதைத் தொழிலாகக் கொள்வோரை இரவச்சம் பாடி எச்சரிக்கின்றார். அடுத்து மனிதனுக்கு இரத்தலை ஒரு தொழிலாக வைத்த இறைவன் மீது அக்கோபம் திரும்புகிறது. பிறப்பால் அனைவரும் சமம். தொழிலால்

பெருமையோ சிறுமையோ இல்லையென்பதை “பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்“(கு.972) எனச் சமூகத்திற்கு ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். கொடுங்கோல் அரசனால் துன்பப்பட்டு தாங்க முடியாது அழுத குடிகளின் கண்ணீர், அவ்வரசனின் செல்வாக்கை அழிக்கும் பெரும்படையாகும் (கு.555) எனச் சாபமிடுவதைக் காணலாம். பிறன்மனை நோக்காப் பேராண்மையை அகவொழுக்கத்திற்கு வலியுறுத்திய வள்ளுவம், பகைவனுக்கு அருளும் நன்னெஞ்சாகிய பேராண்மையைப் புறவொழுக்கத்திற்கு வலியுறுத்துகிறது (கு.773).

**வருத்தம்**

உலகத்தின் போக்கு குறித்த வருத்தம் வள்ளுவருக்கு மிக அதிகம். நன்னிலைக்கு உயரவேண்டிய மனித இனம், கீழ்நிலைக்குச் செல்வதைக் கண்டெழுந்த வருத்தம். ஆசைகளை ஒழித்தோம் என்று பொய்கூறி நடிப்பவரை நம்பினால், பின்னாளில் நாம் நினைத்து நினைத்து வருந்தும்படியான துன்பங்கள் பலவற்றையும் கொடுக்கும் (கு.275) என வருத்தப்படுகிறார். கேள்விச்செல்வத்தின் சிறப்பை உணராது வாயுணவுக்கு மட்டும் வேலை கொடுக்கும் மக்கள் இறந்தால் என்ன? வாழ்ந்தால் என்ன? (கு.420) என மனம் வெம்பியுரைக்கிறார். தெய்வத்தால் ஆகாதவற்றையும் முயற்சியால் சாதிக்கமுடியும் என்று உறுதிபடக் கூறிய வள்ளுவரே ஊழின் வலிய பிடியை எண்ணி வருத்தமடைகிறார். ஊழைவிட மிகுந்த வலிமையுள்ளவை எவை, அதை விலக்குவதற்கு ஒரு வழியைப் புத்தியினால் ஆராய்ந்தாலும் அங்கும் அவ்வூழ் முன்வந்து நிற்கும் என்று ஊழின் விளைவை வருத்தத்துடன் குறிப்பிடுகிறார். அவரவர் செய்த நல்வினை தீவினைகளின் பயன்களை அவரவர்களே அனுபவிக்க வேண்டுமென்பது இயற்கையின் நியதி. அதுவே ஊழ். முயற்சி, தளராத உள்ளம், நிலைகலங்காதிருத்தல் ஆகியவை மனிதனுக்கு ஆக்கம் தரும் ஆகூழால் தோன்றுவன. இதற்கு மாறாக சோம்பல், கவலை, செய்வதறியாது தடுமாறுதல் ஆகியன அழிவு தரும் போகூழின் அடையாளங்கள்(கு.371). ஊழின் வலியைப் பற்றிப் பத்து குறட்பாக்களில் வருத்தப்பட்ட வள்ளுவர், ஊழினைக் கண்டு அஞ்சவேண்டாமென ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை, ஊக்கம் உடைமை, மடியின்மை என நாற்பது குறட்பாக்களில் சுட்டிக்காட்டுகிறார்.

**நகை**

கபடவேடமிடுபவரைக் கண்டு ஐம்பூதங்களும் கூட சிரிக்கும் எனப் போலிச்சாமியார்களை திருவள்ளுவர் எள்ளி நகையாடுகிறார். பொருளையே பெரிதென நினைக்கும் பொதுமகளிரைத்

தழுவுதல், இருட்டறையில் நமக்குத் தொடர்பில்லாத பிணத்தைத் தழுவுதல் போன்றதென ஏளனமாகக் கூறுகிறார்(கு.913). இக்கணம் என்ன செய்வதென்றே தெரியாதிருப்பவன், பலகோடி எண்ணங்களுடன் ஆசைகளுடன் கனவு காண்பதை எண்ணி நகைக்கிறார்(கு.337). நிலத்திற்குரியவன், நிலத்தைப் பாராது இருந்தால் அந்நிலமும் அவன் மனைவியைப் போல் பாராமுகமாய்ப் பிணங்கிவிடும்(கு.1039). நிலத்தை வைத்துக்கொண்டு பொருள் இல்லை எனச் சோம்பேறியாகத் திரிபவனைக் கண்டு நிலமகள் தனக்குள்ளே சிரிப்பாள்(கு.1040) என்று இவ்வாறெல்லாம் எள்ளலாகக் கூறினால் மக்களைத் திருத்தமுடியும் என திருவள்ளுவர் நம்பினார். துன்பம் வந்தகாலத்தும் சிரிக்க வேண்டுமென (கு.621) நம்பிக்கையையும் தருகின்றார்.

**அச்சம்**

வள்ளுவர், முகத்தில் இனிமையாகச் சிரித்துப் பேசி மனதால் வஞ்சகம் கொண்டவருடன் அருகிலிருக்க அச்சப்படவேண்டும் என்கிறார் (கு.824). பகைவர் கும்பிட்ட கைகளுக்குள் நம்மைத் தாக்கும் ஆயுதம் மறைந்திருக்கும். அதனால் அழுத கண்ணீருக்குப் பின்னேயுள்ள விஷத்தைக் கண்டு அஞ்சி எச்சரிக்கின்றார்(கு.828). அறிவுடையவர்களது தொழில் எப்போதும் அஞ்ச வேண்டியவற்றுக்கு அஞ்சுவது தான்(கு.428). ஐம்பொறிகளையும் அடக்கிய உண்மைத் துறவியாரின் கோபத்தை யாராலும் தடுத்தல் இயலாதாகையால் அவர்களுக்கு அஞ்சி கவனமாக நடத்தல் நன்று (கு.429). ஆற்றல் உடைய பெரியாருக்குத் தீமை செய்வது, எமனைக் கைகாட்டி அழைத்தாற் போன்றது (கு.894). எனவே பெரியாரைப் பிழையாதிருத்தல் நன்று என வலியுறுத்துகிறார் வள்ளுவர். மனம் வாக்கு காயம் என மூன்றினாலும் மற்றவரைக் காயப்படுத்தாதவனே உண்மையான மனிதன். அவனது தீவினையே அவனைத் தீயினால் சுட்டப் புண்ணாக, தீய பயத்தலாக முன்நிற்கிறது. அதனால் திருவள்ளுவரைப் பெரிதும் அச்சம் கொள்ளச் செய்தது தீவினையே. “இருளுள்ள இடத்தில் ஒளியும்; ஒளியுள்ள இடத்தில் இருளும் கலந்துநிற்க காண்பது இவ்வுலகம். இவற்றிற்கு அப்பாற்பட்ட பேரொளி நிலையை எய்துதற்கு மனிதன் முயலவேண்டும். அதற்கு இறைவனின் உயரிய இறைமைப் பண்புகளைச் சொல்லிச்சொல்லிப் பாடிப்பாடி உருவேற்றி நாமும் அந்நிலை நோக்கி உயர்தல் வேண்டும்”[3] எனத் தமிழண்ணல் குறிப்பிடுகிறார். வள்ளுவரின் அடுத்த அச்சம் மனிதனின் உடலைத் தாக்கும் நோய்கள். “உடலை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே” என்றார் திருமூலர். மனிதனின் நல்வாழ்வுக்கு ஏற்ற அறங்களோடு, அவனது உடலை நோயின்றி காக்கும் வழிகளைச் சிந்தித்து மருந்து எனும்

தலைப்பில் வலியுறுத்துகிறார். இறப்பு உலகோர் அனைவருக்கும் பொதுவானது. அதனை நினைத்துப் புலம்பாமல் எல்லா உயிர்களையும் சமமாக எண்ணி அன்பு பாராட்டவேண்டும். அப்போது எங்கும் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும். “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற எண்ணம் அனைவரிடத்திலும் உண்டாவதுடன் அதனை நோக்கிச் செயலாற்ற வைக்கும் (கு244). உலகளாவிய சிந்தனையுடையவர் வள்ளுவர் என்பதற்கு இதனை விட வேறு சான்றுண்டா?

**மதம் மற்றும் பாலியல் சிந்தனை**

பிறழ்வுநிலை உணர்வுகளில் இவையும் முக்கியத்துவம் வாய்ந்தவை. திருநாவுக்கரசர், திருமங்கையாழ்வார் பாடல்களில் அவர்களின் மதமாற்றம், வேதனையாகத் தன்னைத்தானே கேள்விக்குள்ளாக்கும் வகையில் வெளிப்பட்டுள்ளது. அதுபோல் மறுபிறவி, கடவுள் பற்றிய குறட்பாக்கள், திருவள்ளுவரின் மதம் பற்றிய பல்வேறு விவாதங்களுக்குக் களங்களாயின. ஒவ்வொரு மதத்தினரும் தத்தமக்குரியதாக்கி திருவள்ளுவரை ஏற்பதுவே திருக்குறள் உலகளாவிய சிந்தனை ஒருமையுடையது என்பதனை மெய்ப்பிக்கும். காமத்துப்பாலில் இன்பம் குறித்துப் பேசிய வள்ளுவர் வீடுபேறு, தனிமனிதனை, சமுதாயத்தை வீழ்த்துவதென்பதால் அதனை ஒதுக்கினார். ஆனால் அவற்றைப் பற்றிக் கூறி எச்சரித்தார். புகழ்நோக்கு தனிமனிதனையும் சமுதாயத்தையும் உயர்த்துவதால் அதனை வாழ்வுப்பயனாக வலியுறுத்தினார். “இன்பம், புகழ் இரண்டிற்கும் அடிப்படை அறநெறியே என்பது வள்ளுவரின் அசையாக்கொள்கை”. அதுவே உலகச் சாதனைக்கும் அடிப்படை என்பதே வள்ளுவம்.

**நிறைவுரை**

மனிதவாழ்வு வளம்பெற தனிநபர் மற்றும் சமுதாயம் திருத்தப்படவேண்டியவை. தனிமனித அறத்திற்கு அறத்துப்பாலையும் சமூக அறத்திற்குப் பொருட்பாலையும் வைத்து சமூகமறுமலர்ச்சிக்கு எக்காலத்திற்கும் வழிகாட்டியாகத் திருக்குறளைப் படைத்தார் திருவள்ளுவர். உலகத்தின் மீது அவர் கொள்ளும் கோபம், அச்சம், வருத்தம், எள்ளல், நகை ஆகியவை அவரது பிறழ்வுநிலை உணர்வுகளாக வெளிப்படுகின்றன. உலகத்தின் மீது அக்கறை கொண்டவரிடத்து தான் தன்னையும் மீறி இப்பிறழ்வு உணர்வுகள் தோன்றும். அவரது பிறழ்வுநிலைஉணர்வுகளின் வெளிப்பாடான திருக்குறள், நாடு, இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து எக்காலத்திற்கும் தனிமனித நல்லொழுக்கம் மற்றும் சமூக நன்னடத்தைக்கு வழிகாட்டியாகத் திகழ்கின்றது. எனவே திருவள்ளுவர் உலகிற்கே ஞானி, திருக்குறள் ஓர் உலக நூல் என்பதனை அறுதியிட்டுக் கூறமுடியும்.

**அடிக்குறிப்பு**

1. ப.531, பாரதியார் கவிதைகள்

2. ப.40, பாரதியார் கவிதைகள்

3. ப.96, திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள்

**துணைநூற்பட்டியல்**


1. இரத்தினம். ஆ, இதுதான் வள்ளுவம், கலைக்கோ வெளியீடு, சென்னை, முதற்பதிப்பு, 2007.

2. கந்தையா. ந.சி., திருவள்ளுவர், பிரானேஷ் பப்ளிகேஷன், சென்னை, முதற்பதிப்பு, 2019.

3. சுந்தரமூர்த்தி. டாக்டர் இ., பாரதியார் கவிதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை, பதினைந்தாவது பதிப்பு, 2012.

4. செந்துறைமுத்து. புலவர்., திருக்குறள், கங்கை புத்தகநிலையம், சென்னை, ஏழாம்பதிப்பு, 2003.

5. சேதுபதி. முனைவர் சொ., திருக்குறளில் தொல்காப்பிய மெய்ப்பாடுகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, செம்பதிப்பு, 2017.

6. மோகனராசு. டாக்டர். கு., திருக்குறள் ஆய்வும் மதிப்பீடும், திருக்குறள் ஆய்வுமையம், சென்னைப்பல்கலைக்கழகம், சென்னை, முதற்பதிப்பு, 1987.